**அனுப்புநர்**

சா.சேதுராமவர்மா,
இணை இயக்குநர் (மேல்நிலை),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள் மற்றும்
இணை இயக்குநர்(கல்வி),
புதுச்சேரி

**ந.க.எண். 242170 /எப்1/2018** **நாள்.09.02.2019**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – மார்ச்/ஏப்ரல் 2019 – பள்ளி மாணாக்கரின் பெயர்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் – இறுதி வாய்ப்பு வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :** இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதங்கள், நாள்.18.01.2019 மற்றும் 24.01.2019.

------

பார்வையில் காணும் இவ்வலுவலகக் கடிதங்களில், அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி மார்ச்/ஏப்ரல் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் தங்கள் பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்து, அதில் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் மற்றும் திருத்தங்கள் இருப்பின், அவற்றை பட்டியலிட்டு சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும், முதன்மைக் கல்வி அலுவலர்கள் அரசுத் தேர்வுத் துறை இணையதளத்தில் (www.dge.tn.gov.in) தங்களுக்கான User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, தங்களது ஆளுகைக்குட்பட்ட மேல்நிலை பள்ளிகளிலிருந்து பெறப்படுகின்ற மார்ச்/ஏப்ரல் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் மாணாக்கரின் பெயர்ப்பட்டியலில் உள்ள திருத்தங்களை 22.01.2019 முதல் 25.01.2019 வரையிலான நாட்களுக்குள் பதிவேற்றம் செய்திட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்டவாறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள மார்ச்/ஏப்ரல் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை **09.02.2019 முதல் 12.02.2019 வரையிலான நாட்களில் இரவு 08.00 மணி முதல் காலை 10.00 மணி வரையிலான நேரத்தில் மட்டும்** அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து, பெயர்பட்டியலில் உள்ள

..2..

விவரங்களை சரிபார்த்துக் கொள்ளுமாறும், திருத்தங்கள் ஏதும் இருப்பின், அவ்விவரத்தினை சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலகங்களில் **12.02.2019–க்குள்** ஒப்படைக்குமாறு அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறும், பள்ளித் தலைமையாசிரியர்களிடமிருந்து பெறப்படும் திருத்தங்கள் குறித்த விவரத்தினை சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் இவ்வலுவலக மின்னஞ்சல் (www.dge.tn.gov.in) முகவரிக்கு **13.02.2019–க்குள்** அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அதன்பின், எக்காரணத்தைக் கொண்டும் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும், மீளவும் திருத்தங்கள் இருப்பின் சம்பந்தப்பட்ட மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–

**இணை இயக்குநர் (மேல்நிலை)**

<u>நகல்</u>

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

– தகவலுக்காகவும், தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டும் அனுப்பலாகிறது